9

# குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்

TML 009

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



எல்லோரும் பெண்கள்.
ஒரே குடும்பச் சட்டம்.
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.


flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

குடும்பத்தில் பிளவு ஏற்படும் என்றால் அது பெண்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் மனதில் அழுத்தத்தைத் தரும் ஒரு காலமாக மாறிவிடுகிறது. நீங்களும் உங்களது வாழ்க்கைத் துணைவரும் பிரிந்து செல்லும் பொழுது நீங்கள் பல சட்டப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டி இருக்கும். பொருளாதார ரீதியில் உங்களுக்கு ஆதார வசதி பெறுவது பற்றி நீங்கள் தீர்மானிக்க வேண்டும். பிள்ளைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்துடன் குடும்பத்தின் சொத்தினைப் பிரித்துக் கொள்ள வேண்டும். இவை எல்லாம் கஷ்டமான விடயங்களாக அமையும். சில வாழ்க்கைத் துணைகள் இவற்றை தாமாகவே செய்து முடிக்கக் கூடியவர்களாக உள்ளனர். ஆனால் பெரும்பாலானவர்களின் விடயத்தில் இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அவர்களுக்கு உதவி சற்று தேவைப்படுகிறது.

உங்களுடைய திருமண உறவு முறிவடையும் பொழுது குடும்பச் சட்டம் (Family Law) பற்றி அறிந்துள்ள ஒரு சட்டத்தரணி உங்களுக்கு உதவுவதற்கு இருப்பது அவசியம். இவ்விடயத்தில் சட்ட ஆலோசனை பெறத் தவறுவீர்கள் என்றால் நீங்கள் முக்கிய சட்டரீதியான உரிமைகள் சிலவற்றை இழந்து விடக்கூடும். அவ்வாறான உரிமைகள் உங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் அறியாது போகும் பொழுது இவ்வாறு ஏற்படலாம். பின்வரும் சந்தர்ப்பங்களில், உங்களுக்கு உதவக்கூடிய நிலையில் ஒரு சட்டத்தரணியை நீங்கள் வைத்திருப்பது மிக முக்கியம் ஆகும்:

- உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களைத் துன்புறுத்தி அல்லது வன்முறைக்கு உள்ளாக்கி இருந்தால்
- உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களிடம் அடாவடித்தனமாக நடந்து அல்லது உங்களைப் பயமுறுத்தி இருந்தால்
- உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களைத் தன் சுயநன்மைக்காகப் பயன்படுத்தி இருந்தால்
- உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களைவிடக் கூடிய அதிகாரத்தைக் குடும்பத்தில் கொண்டு இருந்தால்
- நீங்கள் ஆங்கில மொழியில் வாசிப்பதற்கு, பேசுவதற்கு அல்லது புரிந்து கொள்வதற்கு இயலாத நிலையில் இருந்தால்
- உங்கள் வாழ்க்கைத் துணைவர் ஒரு சட்டத்தரணியை தனக்கு என்று வைத்து இருந்தால்

## குடும்பச் சட்டம் தெரிந்த ஒரு சட்டத்தரணியை எப்படிக் கண்டுபிடிப்பது

குடும்பச் சட்டம் தெரிந்த ஒரு சட்டத்தரணியை நீங்கள் அறிந்திருக்கவில்லை என்றால் அப்படியான ஒருவரை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு உதவக்கூடிய சில இடங்கள் கீழே தரப்பட்டு உள்ளன:

- உங்கள் உள்;ர், சமூக சட்ட உதவிப் பணி நிலையம் (community legal aid clinic).
- உங்கள் உள்;ர், பெண்கள் புகலிடம் (women's shelter) அல்லது சமூக முகவர் நிலையம் (community agency).
- **தாக்குதலுக்குட்பட்ட பெண்களின் அவசர அழைப்பு இணைப்பு** (Assaulted Women's Help Line). ரொறோன்ரோ நகரில் இதற்கான தொலைபேசி எண் (416) 863-0511 அல்லது கட்டணமில்லாத எண் 1-866-863-0511. செவிப்புலன் குறைந்தவர்கள் அழைக்கும் எண் 1-866-863-7868. இது 24 மணிநேரமும் அழைக்கக் கூடிய ஒரு நெருக்கடி நிலை உதவி இணைப்பு ஆகும்.

- **குடும்பச் சட்டக் காரியாலயம்** (Family Law Office). ரொறோன்ரோ, ஒற்றாவா, அல்லது தண்டர்பே நகரங்களில் நீங்கள் வாழ்ந்தால் இவ்வகைக் காரியாலயங்களை அணுகலாம். குடும்பச் சட்ட வழக்குகளில் உதவக் கூடிய சட்டத்தரணிகள் இக்காரியாலயங்களில் இருக்கிறார்கள். இச்சட்டத்தரணிகளின் சேவைக்கான கட்டணத்தை சட்ட நிதியுதவி ஒன்ராறியோ (Legal Aid Ontario – LAO) என்ற அமைப்பு வழங்குகிறது. சட்ட நிதியுதவித் தகைமைச் சான்றிதழ்கள் (legal aid certificates) வைத்திருப்பவர்களை மட்டுமே இவர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.
- நீங்கள் துன்புறுத்தப்பட்டு இருந்தால் **சட்டத்தரணியிடம் அனுப்பும் சேவை** (Lawyer Referral Service) என்பதை 1-800-268-8326 தொலைபேசி எண்ணில் அழைக்கலாம். நீங்கள் துன்புறுத்தப் படவில்லை என்றாலும் இச்சேவையைப் பயன்படுத்த முடியும். இந்நிலையில் அழைக்க வேண்டிய தொலைபேசி எண் 1-900-565-4577 ஆகும். ஆனால் உங்கள் அழைப்புக்கு $6 டொலர்கள் கட்டணம் அறவிடப்படும்.

புதிதாக ஒரு சட்டத்தரணியை நீங்கள் தொலைபேசியில் அழைத்துக் கதைக்கும் பொழுது குடும்பச் சட்டம் தொடர்பாகப் பணியாற்றிய அனுபவம் அவர்களுக்கு இருக்கிறதா என்று அவர்களிடம் கேட்கத் தவறிவிடாதீர்கள். இந்த அனுபவம் பெற்றுள்ள சட்டத்தரணி ஒருவரையே உங்களுக்கென அமர்த்துவதற்கு முயற்சி செய்யுங்கள்.

## குடும்பச் சட்டம் தெரிந்த உங்கள் சட்டத்தரணியின் சேவைக்கு எவ்வாறு பணம் கொடுப்பது

சட்டத்தரணி ஒருவரை நீங்கள் உங்களுக்கென சம்பளத்துக்கு நியமிக்கும் பொழுது அதற்குப் பணம் தேவைப்படுகிறது. ஒரு சட்டத்தரணியை நியமிக்கும் பணவசதி உங்களுக்கு இல்லை என்றால் நீங்கள் **சட்ட நிதியுதவி ஒன்ராறியோ** (Legal Aid Ontario – LAO) என்ற அமைப்பிடம் உதவி கோரி விண்ணப்பிக்க முடியும். சிலவிதமான குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு இவர்கள் உதவி தருகிறார்கள். இவர்களிடம் சட்ட உதவி கோரி விண்ணப்பம் செய்வதற்கு நீங்கள் ஒன்ராறியோவில் பரந்திருக்கும் LAO காரியாலயங்களில் எந்த ஒன்றுக்காவது செல்ல முடியும். உங்களுக்கு மிகக் கிட்டிய இடத்தில் உள்ள அவர்களது காரியாலயத்தின் முகவரி மற்றும் தொலைபேசி எண் என்பவற்றை அறிந்து கொள்ள உங்கள் தொலைபேசி இலக்கப் புத்தகத்தில் தேடிப் பாருங்கள். அல்லது 1-800-668-8258 என்ற தொலைபேசி எண்ணை அழையுங்கள். செவிப்புலன் குறைந்தவர்கள் அழைக்கும் எண் 1-866-641-8867 ஆகும். நீங்கள் ரொறோன்ரோ நகரத்தில் வசிப்பவர் என்றால் 416-979-1446 என்ற எண்ணை அழையுங்கள். LAO அமைப்பு பற்றி மேலும் கூடுதலான தகவலை www.legalaid.on.ca என்ற அவர்களின் இணையத்தளத்தில் கண்டு கொள்ள முடியும்.

சட்ட நிதியுதவி ஒன்ராறியோ அமைப்பின் சட்ட நிதியுதவியைப் பெறுவதற்கு உங்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பின்வருமாறு:

- குறைவான ஒரு வருமானம்
- அவர்களது எண்ணத்தின்படி, ஒரு சட்டத்தரணி தேவைப்படும் அளவுக்கு "போதியளவு பாரதூரமான" ஒரு சட்டப் பிரச்சினையை எதிர்நோக்குதல்

நீங்கள் துன்புறுத்தப்பட்டு அல்லது அடாவடித்தனத்துக்கு உள்ளாக்கப்பட்டு இருந்தால் அதுபற்றி சட்ட நிதியுதவி ஒன்ராறியோ அமைப்பிடம் தெரிவியுங்கள். வன்முறையை அனுபவிக்கும் பெண்களுக்கு சட்ட நிதியுதவி வழங்குவதற்கு அவர்கள் பெருமளவு தயாராக இருப்பார்கள்.

நீங்கள் சட்ட நிதியுதவி ஒன்ராறியோ அமைப்பின் உதவியைப் பெறும் தகைமை நிலைமைகளைக் கொண்டிருந்தால் அவர்கள் உங்களுக்கு **சட்ட நிதியுதவி தகைமைச் சான்றிதழ்** (legal aid certificate) ஒன்றினை வழங்குவார்கள். இந்தச் சான்றிதழைக் காட்டி நீங்கள் ஒரு சட்டத்தரணியை சம்பளத்துக்கு அமர்த்திக் கொள்ள முடியும். சில சந்தர்ப்பங்களில் சட்ட நிதியுதவி ஒன்ராறியோ அமைப்பு தாம் செலவிடும் பணத்தை நீங்கள் பின்னர் திருப்பி அவர்களுக்குக் கட்டுவீர்கள் என்ற நிபந்தனையின் கீழ் ஒரு சட்டத்தரணிக்குப் பணம் கொடுப்பதற்கு முன்வரக் கூடும்.

உங்கள் வாழ்க்கைத் துணைவர் உங்களைத் துன்புறுத்தி அல்லது அடாவடித்தனத்துக்கு உள்ளாக்கி இருந்தால், சட்டரீதியான புத்திமதியை இரண்டு மணி நேரத்திற்கு இலவசமாகப் பெறும் வசதியை உங்களுக்குத் தருகின்ற, சட்ட நிதியுதவி தகைமைச் சான்றிதழ் ஒன்றினை நீங்கள் பெறமுடியும். இச்சான்றிதழினை நீங்கள் பெறுவதற்கு உங்களுக்குக் குறைவான வருமானம் இருப்பதாக நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நீங்கள் **"குடும்ப வன்முறை புத்திமதி கூறும் சட்டத்தரணிக்கான அதிகாரம் வழங்கல்"** (Advice Lawyer Family Violence Authorization) என்று கூறப்படும் படிவத்தினை நிரப்ப வேண்டி இருக்கும். இப்படிவத்தை நீங்கள் சமூக சட்ட உதவிப் பணிநிலையங்களில் அல்லது பெண்கள் புகலிடங்களில் பெற முடியும்.

சட்ட நிதியுதவிச் சான்றிதழ்களை எல்லாச் சட்டத்தரணிகளுமே ஏற்று உதவி செய்ய முன்வரமாட்டார்கள். ஒரு சட்டத்தரணியை தொலைபேசியில் அழைத்து அவரைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்யும் பொழுது, அந்தச் சட்டத்தரணி சட்ட நிதியுதவி ஒன்ராறியோவின் சட்ட உதவிப் பணியைச் செய்வதுண்டா என்று அவரிடம் கேட்பதற்குத் தவற வேண்டாம்.

## உங்களுக்கு ஒரு சட்டத்தரணி இல்லாத பொழுது நீங்கள் என்ன செய்யலாம்

உங்களது குடும்பச் சட்ட வழக்கின் தொடர்பில் உங்களுக்கு உதவுவதற்கு ஒரு சட்டத்தரணி உங்களிடம் இல்லை என்ற நிலையில் கூட நீதிமன்றக் கட்டிடத்தில் சில சட்டரீதியான தகவலையும் ஆலோசனையையும் நீங்கள் பெறக்கூடியதாக இருக்கும். ஒவ்வொரு குடும்ப சட்ட நீதிமன்றத்திலும் நீங்கள் இரண்டு வகைப்பட்ட உதவியினைப் பெற முடியும்:

- **கடமையிலுள்ள ஆலோசனை சட்டத்தரணிகள்** (Duty Counsel Lawyers). குறைந்த வருமானம் கொண்டவர்களாய் இருப்பதுடன் சட்டத்தரணி ஒருவரை அமர்த்தி இருக்காமல் அவ்விடம் செல்லும் மக்களுடன் உரையாடுவது இவர்களது பணியாகும். இவர்களால் உங்களுக்கு புத்திமதி வழங்க முடியும். அவர்களின் வேலைப் பழு அதிகம் இல்லாத நேரங்களில் அவர்கள் நீதிமன்றத்துக்கு வந்தும் உங்களுக்கு உதவ முடியும்.

- **குடும்பச் சட்ட தகவல் நிலையங்கள்** (Family Law Information Centres – FLICs). குடும்பச் சட்டம் பற்றிய சட்ட ரீதியான தகவலை இங்கு உள்ளவர்கள் உங்களுக்குத் தருவதுடன் குடும்ப நீதிமன்றம் (குயஅடைல ஊழரசவ) எவ்வாறு செயற்படுகிறது என்றும் விளக்கம் தரமுடியும். குடும்பங்களுக்குக் கிடைக்கக் கூடியதாக உள்ள வேறுவகையான ஆதார உதவிகள் பற்றியும் இவர்கள் உங்களுக்குச் சொல்லக் கூடியதாக இருப்பார்கள். இவற்றுக்கு உதாரணமாக பெற்றோரியல் வகுப்புகள், குடும்பத்தினுள்ளே சமரச முயற்சி, அல்லது சமூக முகவர் நிலையங்களுடன் தொடர்பு கொள்வது எப்படி போன்றவற்றைக் கூறலாம். சில FLIC தகவல் நிலையங்களில் உங்களை நேரில் சந்தித்து உரையாடக்கூடிய, **புத்திமதி கூறும் சட்டத்தரணிகள்** (Advice Lawyers) இருப்பார்கள். இவ்வகையான புத்திமதி கூறும் சட்டத்தரணிகள் உங்களது நிலைமை பற்றி உங்களுடன் கலந்துரையாடுவதுடன் சட்டரீதியாக சில புத்திமதிகளையும் வழங்க முடியும். ஆனால் இவர்கள் நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவ வரமாட்டார்கள்.

ஒரு சில குடும்பச் சட்ட நீதிமன்றங்களில் நீங்கள் சட்டத் துறை மாணவர்களிடமிருந்து உதவி பெறக்கூடியதாக இருக்கும். சட்டத்தரணிகளை வைத்திருக்காத மக்கள் நீதிமன்றப் படிவங்களை நிரப்புவதற்கு இவர்கள் உதவுகிறார்கள்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. **குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)**
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.